**IA.No. 01/2025 in OS.No. 130/2024**

PW1- சுதாகர், த/பெ. சேட்டு,

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது வேட்டவலத்தில் வசித்து வருகிறேன். சிவக்குமார் எனக்கு என்ன உறவு முறை என்றால் நண்பர் ஆவார். சிவக்குமார் எனக்கு எந்த வருடம் பவர் கொடுத்தார் என்றால் 2023ம் ஆண்டு ஆகும். வழக்குச் சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் ஓலைப்பாடியில் உள்ளது. சிவக்குமார் என்பவர் இராணுவத்தில் பணியாற்றிவருகிறார். அவரது சொந்து ஊர் அகரம் கிராமம் ஆகும். அகரம் கிராமத்திற்கும் தாவா சொத்து உள்ள இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 5 கிலோமீட்டர் இருக்கும். நான் இருக்கும் இடத்திற்கும் தாவா சொத்து உள்ள இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 1 1/2 கிலோ மீட்டர் இருக்கும். எதிர்மனுதாரர்களும் வேட்டவலத்தில் தான் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். மனு சொத்தில் கொட்டாய் ஒன்று உள்ளது என்றால் சரிதான். மனு சொத்தில் உள்ள கொட்டாயில் மாடு கட்டியுள்ளார்கள் என்றால் மாடுகட்டும் கொட்டாய் பட்டாவில் இல்லை பட்டாவில் மோட்டர் பம்பு செட்டுதான் உள்ளது. மாடுகள் எல்லாம் எதிர் மனுதாரருக்கு சொந்தமானது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பொது அதிகாரம் பத்திரத்தில் சிவக்குமார் வழக்கு சொத்தின் அனுபவத்தில் உள்ளதாக எந்தக் குறிப்புகளும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் போது, வழக்கு தாக்கல் செய்த பின்னரும் வழக்கின் வாதி இந்திய ராணுவத்தில் பணியில் இருந்தார் என்றால் சரிதான். இந்த தாவா சொத்து என்பது கூட்டுக்குடுமப சொத்து என்பதால் செல்வி, சாந்தி, மல்லிகா, முருகன் மற்றும் எதிர் மனுதாரர்

ரமேஷ் மற்றும் பவர் கொடுத்த சிவக்குமார் ஆகியோர்கள் மீது திருவண்ணாமலை சார்பு நீதிமன்றத்தில் OS.NO. 123/2023ல் பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். இந்த அசல் வழக்கு 130/2024ல் வழங்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு மனுவில் 2ம் எதிர்மனுதாரர் கம்சலா என்பவர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாமல் வழக்கு விசாரணையில் பங்குகொள்ளாததால் தோன்றாத்தரப்பினராக நீதிமன்றம் ஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி IA.No. 01/2023ன் உத்தரவிற்கு எதிராக 1ம் எதிர்மனுதாரர் மேற்படி தற்கால உறுத்துக்கட்டளையை நீக்கரவு செய்ய மனுசெய்துள்ளார் என்றால் சரிதான். 2023ம் ஆண்டு புகார் கொடுத்தேனா என்றால் நான் தான் கொடுத்தேன். நீதிமன்றத்திற்கு சென்று பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். பின்னர் எப்போது மீண்டும் புகார் கொடுத்தேன் என்றால் 2024ம் ஆண்டு புகார் கொடுத்தேன். அதன் பின்னர் நான் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. சாட்சி என்னை அடித்தார்கள் என்று கூறுகிறார். வண்டியை பிடுங்கிக்கொண்டார்கள் என்றும் கூறுகிறார். நான் 27.01.2025ம் தேதியன்று புகார் கொடுத்தற்கு முதல் தகவல் அறிக்கை போலிசார் பதிவுசெய்தார்களா என்றால் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் நிரூபண ஆவணத்தில் FIR Direction என்று சொல்லியுள்ளேனே எந்த புகாருக்கு என்றால் எனக்கு தெரியுமா என்றால் சண்டைக்காக பதிவு செய்யச் சொல்லி நீதிமன்றத்தில் மனு செய்தேன். மேற்படி நீதிமன்றத்தில் மனு செய்த பின்னர் நீதிமன்றத்தின் அழுத்தத்தின் காரணமாகத் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் கட்சிக்காரர்களை வைத்து போலிசாரை மிரட்டியதால்தான் முதல் தகவல் அறிக்கை போலிசார் பதிவு

செய்யவில்லை. நான் தாக்கல் செய்யும் ம.சா.ஆ.6 முதல் ம.சா.ஆ.10 வரை உள்ள ஆவணங்கள் அனைத்தும் மனுவுடன் தாக்கல் செய்யாமல் தற்போது தான் நான் தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.6 கூட்டுப்பட்டாவாக சிவக்குமார், யஸ்விதா என்று உள்ளது என்றால் சரிதான். அது கூட்டு சதி செய்து போலியாக தயாரித்துள்ளார்கள். வேட்டவலம் காவல் நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரர் புகார் கொடுத்தன் அடிப்படையில் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை அதுதான். அந்த முதல் தகவல் அறிக்கை **எ.ம.சா.1** ஆகும். என்னிடம் காட்டப்படும் ரமேஷ் மீது கொடுத்த நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டது தான் என்றால் தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் உள்ள 9வது வரியில் கடந்த 3 ஆண்டுகளாகவே அந்த நிலத்தை புகழேந்தியின் தந்தையான ரமேஷ் இதுநாள் வரை எங்களுக்கு தராமல் அவரே பயிரிட்டு அனுபவித்து வருகிறார். என் நண்பர் சிவக்குமார் இந்திய ராணுவத்தில் கடந்த 21 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பிரச்சனை என்பது நிலம் சம்மந்தமாகத் தான் என்றால் நான் சென்று பயிர் வைக்கும் போது நடந்த பிரச்சனை ஆகும். இந்த சொத்து நானும் அனுபவிக்கவில்லை என்றாலும், சிவக்குமார் அனுபவிக்கவில்லை என்றாலும், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் வெறும் ஆவணங்கள் மட்டும்தான் உடல் அளவில் சொத்துக்கள் ஏதும் இதுநாள் வரையில் அனுபவிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்படி தாவா சொத்து என் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நீதிமன்ற

அவமதிப்பு செய்தார் என்று தாக்கல் செய்யப்பட்ட மனு என்பது ஒரு பொய்யான மனு என்றால் சரியல்ல. மேற்படி தாவா சொத்திற்கு கூட்டாகத்தான் பட்டா, அடங்கல் ஆகியவை உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் இந்த மனுவிற்காக சேகரிக்கப்பட்ட பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லாததால்தான் நான் வேட்டவலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் கட்சிக்காரர்கள் மிரட்டியதால்தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த மனு என்பது நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் தள்ளுபடிக்கு அருகதையானது என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்